# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1837/25 - 2013 නොවැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.11.21

*1837/25 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 03/2013*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*பீ. பி. ஜயசுந்தர,*
*செயலாளர்,*
*நிதி, திட்டமிடல் அமைச்சு.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2013, நவெம்பர் 21.*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்*

***கட்டளை***

இதனகத்துள்ள அட்டவணையின் 3 ஆம் நிரலில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களின் மீதான இறக்குமதித் தீர்வை வீதங்களை விதிக்கும் அத்துடன் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் "அ" எனும் அட்டவணையின் கீழான சலுகைப் பட்டியலும் விலக்களிப்புப் பட்டியலும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இதனகத்துள்ள அட்டவணையின் சலுகைப் பட்டியலும் விலக்களிப்புப் பட்டியலும் சேர்க்கப்படும் தன்மையான தீர்மானமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகையால்,

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கும் வகையில் 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2013, நவெம்பர் 22 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வருமாறு இக்கட்டளையை விடுக்கின்றேன்.*

*(அ) இதனகத்துள்ள அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளிலும் அட்டவணையின் 5 ஆம் நிரலில் நேரொத்த பதிவுகளில் தரப்பட்டுள்ள பொது விகிதப்படி அல்லது (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் "அ" எனும் அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழ் முன்னுரிமை வீதங்கள் விதிக்கப்பட்டு செலுத்தப்படவும் வேண்டியவிடத்து அட்டவணையின் 4 ஆம் நிரலில் நேரொத்த பதிவுகளில் தரப்பட்டுள்ள முன்னுரிமை வீதங்களின்படி இறக்குமதித் தீர்வையைச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அறவிடப்பட வேண்டுமெனவும் ;*

*(ஆ) (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைச் சட்டத்தின் அட்டவணை "அ" இன் ஏற்பாடுகளின் பட்டியல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இங்கு இணைப்பு I இல் குறிப்பிடப்படும் சலுகைப் பட்டியலை பதிலிடு செய்து அவ் இணைப்பின் 2 ஆம் நிரலில் குறிக்கப்பட்ட ஒவ்வொரு பொருளின் மீதும் அதனது 3 ஆம் நிரலில் நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்ட விகிதங்களின்படி இறக்குமதித் தீர்வையைச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அறவிடவேண்டுமெனவும் ;*

*(இ) (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைச் சட்டத்தின் அட்டவணை "அ" என்னும் அட்டவணையின் கீழுள்ள விலக்களிப்புப் பட்டியல் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இங்கு இணைப்பு II இல் குறிப்பிடப்படும் விலக்களிப்பு பட்டியலை பதிலீடு செய்து குறிப்பிட்ட இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதித் தீர்வைகளிலிருந்து சுங்கப் பணிப்பாளர் நாயகம் விலக்களிக்க வேண்டுமெனவும் இத்தால் வேண்டுகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி*
*(நிதி, திட்டமிடல் அமைச்சர்).*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2013, நவெம்பர் 21.*

*12- 250*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.